

# திருமால் பிள்ளை வாழ்க்கை ஒரு வழிகாட்டி

தி.முருகன்



*தி.முருகன்*
*செல்லத் திருமால் இல்லம்*
*எண் – 15, திருவள்ளுவர் தெரு,*
*பாலாஜி நகர், அனகாபுத்தூர்,*
*சென்னை-600 070*

# நூலின் அமைப்பு

எந்தத் தகவலையும் குறிப்பிட்ட தலைப்புக்களின் கீழ்க் கொடுக்கும்போது, வாசகர்கள் அதைப் பயன்படுத்துவது எளிதாக இருக்கும். அவர்களுக்கு விருப்பமான பகுதிகளை அவர்கள் விரும்பும் வரிசையில் தேர்ந்தெடுத்துப் படிப்பதற்கு வசதியாக இருக்கும். அதன்படியே தலைப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

நான் உங்களிடம் நேரில் உரையாடுவது போலவே முழுப் புத்தகத்தையும் வடிவமைத்துள்ளேன். ஒருவர் ஒரு செய்தியைப் பிறர்க்கு உணர்த்தும்போது அவரே தன் வாய்மொழியால் சொல்லுவது சிறப்பாக இருக்குமென்று கருதியதால் இம்முறையைப் பின்பற்றியுள்ளேன். என் சொந்தக் கருத்துக்களும் எண்ணங்களும் கூட அவ்வப்போது நூலில் இழையோடியிருப்பதைக் காண்பீர்கள்.

பிற்கால சந்ததியினர்க்கு இந்நூல் ஒரு எடுத்துக்காட்டாக அமையவேண்டுமென்ற எண்ணத்திலேயே இந்நூலை உருவாக்கியுள்ளேன்.

நடைமுறை வாழ்க்கையில் மிகுந்த மாற்றங்கள் நேர்ந்துள்ள போதிலும், அடிப்படையான தன்னொழுக்கம், தன் விழைவு முன்னேற்றம், சமூக சிந்தனை என்பன எப்போதும் மாறா. எடுத்துக்காட்டாகத் திருக்குறளில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்கள் அறிவுரைகள் எக்காலத்திற்கும் பொருத்தமாகவே அமைந்துள்ளன. இத்தகைய சிந்தனைப் போக்கும் இந்நூலில் ஆங்காங்கே ஒளிரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலை முழுமையாகப் படிக்கும்போதுதான் இதில் சொல்லப்பட்ட கருத்துக்கள் வாசகர்களைச் சென்றடைவதுடன் அவர்களது உயர்வுக்கும் வழி கோலும்.



# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | நூலின் மூலம் படிப்பினை | 7 |
| 2 | திருமால் பிள்ளை – ஓர் அறிமுகம் | 8 |
| 3 | வாழ்க்கை ஒரு பாடம் | 19 |
| 4 | தோவாளையும் அப்பாவும் | 69 |
| 5 | திருவள்ளுவரின் கருத்துக்களும் அப்பாவும் | 81 |
| 6 | அப்பாவுக்குப் பிடித்த பழமொழிகள் | 123 |
| 7 | அப்பாவுக்குப் பிடித்த பாரதியார் பாடல்கள் | 131 |
| 8 | குடும்பமும் கிளையும் | 135 |
| 9 | அப்பாவின் பிள்ளைகள் | 138 |
| 10 | புகைப்படங்கள் | 141 |

# என்னுரை

நம்மை முழுமையாக உருவாக்கியவருள் தாய், தந்தையரின் பங்கு அளப்பரியது. நமது ஒவ்வொரு வாழ்க்கைப் படியிலும் நம்மை வழி நடத்துவது நமது பெற்றோர்களே. நமது பெற்றோர்கள் நம்மை எப்படி வழி நடத்திச் சென்றார்களோ, அங்ஙனமே அல்லது அதைவிடச் சிறப்பாகவோ நாமும் நமது பிள்ளைகளையும் வழி நடத்திச் செல்வோம்.

''தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கெல்லாம் இனிது''

என்ற குறட்பா பெற்றோர்களின் தன்னலமற்ற தன்மையை வெளிப்படுத்துகின்றது.

இந்த நூலில் என் அப்பாவைப்பற்றி நான் உணர்ந்த, பிறரால் உணரப்பட்டுத் தெரிவிக்கப்பட்டவற்றை உணர்வு பூர்வமாகத் தெரிவிக்க முயன்றுள்ளேன். இந்த உணர்வு பூர்வமான செய்திகள் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படுபவையாவன.

இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் உள்ளது உள்ளபடியே கொடுக்கப்பட்டுள்ளன. மிகையேதுமில்லை.

பலராலும் அறியப்பட்டவர்களைப்பற்றியும் அவர்களது வாழ்க்கை முறை பற்றியும் எழுதும்போது எல்லோரும் அவற்றைப் படிக்கவும், தெரிந்துகொள்ளவும் ஆர்வமாயிருப்பார்கள். உலகோரால் அறியப்படாத சாதாரண மக்களும் போற்றத்தக்க வாழ்க்கை நெறி முறைகளை மேற்கொண்டு வாழ்ந்துள்ளனர். அத்தகையோர் வாழ்க்கை முறைகளிலிருந்தும் கற்றுக்கொள்ள வேண்டியவை பல உள்ளன. என் தந்தையின் வாழ்விலிருந்து உறுதியாகவே பலருக்கும் பயன்

*தரும் செய்திகளை இங்கே தொகுத்து வெளியிட்டுள்ளேன். படித்துப் பயன் பெற வேண்டுகின்றேன்.*

*எனது தந்தை மிகப் பெரும் எண்ணிக்கையிலான மாந்தரால் அறியப்படாதவராயிருந்தபோதிலும், எனது சொந்த ஊர் தோவாளையில் அவருக்கென்று ஒரு தனி மதிப்பும் மரியாதையும் இருந்தது. அவரது பழக்க வழக்கங்கள் பிறரால் பின்பற்றத் தக்க வகையில் அமைந்திருந்தன. இன்றைய தலைமுறையினரும் அப் பெரியாரின் வழிமுறைகளைப் பின்பற்றி வாழ்வில் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கிலேயே இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.*

## நன்றியுரை

*இந்த நூலைத் தொகுக்க உதவியாக இருந்த அன்பர்கள் எல்லோருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக என் அத்தான் திரு.சுவாமிநாத பிள்ளை அவர்களுக்கு நான் மிகவும் கடமைப் பட்டுள்ளேன்.*

*மனத்தளவில் இந்நூலை எழுதத் தூண்டுகோலாக இருந்த அப்பாவுக்குத்தான் நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.*

*தங்கள் அன்பன்,*
*தி.முருகன்.*

# *1. நூலின் மூலம் படிப்பினை*

*நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு சம்பவங்களிலும், நிகழ்வுகளிலும் நாம் சில பல பாடங்களைக் கற்றுக்கொள்கிறோம். எந்த எழுத்துக்கள் வாசகர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்துகின்றனவோ அவை சிறந்த எழுத்துக்களாக ஏற்கப்படுகின்றன.*

*ஒரு நூல் பலருக்குப் பாடம் பயிற்ற முடியுமா? முடியும் என்பதற்கு அண்ணல் காந்தியின் தன் வாழ்க்கை வரலாறு எடுத்துக்காட்டு. உத்தமர் காந்தியின் வாழ்க்கை முறையையும், கருத்துக்களையும் இன்றைய அமெரிக்க சமூகமே ஏற்றுக்கொள்ளத் தக்க வகையில் அந்நூல் அமைந்துள்ளது.*

*ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் பல அற்புதமான சக்திகள் உள்ளன. ஒரு சிலரே அவ்வற்புதச் சக்திகளை வெளிக் கொணர்ந்து சமுதாயத்திற்கு உதவுகின்றனர்.*

*இந்நூல் உங்களுக்குள் ஒளிந்துள்ள அவ்வற்புதச் சக்தியை வெளிக் கொணருமென்று நீங்கள் உறுதியாக நம்பலாம்.*

# 2. திருமால் பிள்ளை – ஓர் அறிமுகம்.





***58 வது வயதில்***





*74 வது வயதில்*



***84 வது வயதில்***

*என் ஆச்சி (தந்தை வழிப் பாட்டி), பொன்னம்மாள், தீவிரமான திருமால் பக்தர். எங்கள் ஊரில் (தோவாளை) கிருஷ்ணன் கோவில் ஒன்று உள்ளது. காலை, மாலை கோவிலில் தவறாது*

*பூஜை நடைபெறும். கோவில் மணி ஓசை கேட்ட உடன் எந்த வேலை பார்த்துக்கொண்டிருந்தாலும் அதனை அப்படியே போட்டுவிட்டுக் கோவிலுக்கு ஓடிவிடுவார். கோவிலில் பூஜை முடிந்த பின்னரே வீடு திரும்புவார்.*

*இரண்டு பெண் குழந்தைகளுக்குப் பிறகு, வேண்டி நின்று பெற்ற ஆண் மகன்தான் என் அப்பா. அதனால்தான் என் அப்பாவுக்குத் 'திருமால்' என்று பெயர் சூட்டி வளர்த்தார்கள். சாதாரணமாக எங்கள் ஊர்களில் தாத்தா பெயரையே பேரனுக்கு (பெயரன் என்பதுதான் பேரன் என்று மருவிற்று என்பதனைச் சொல்லவும் வேண்டுமோ?) வைப்பார்கள். இதற்கு மாறாக எங்கள் அப்பாவுக்குப் பெயர் அமையக் காரணம் என் ஆச்சியின் அளவிலாத திருமால் பற்றே.*

*அப்பா சிறுபிள்ளையாக இருந்தபோது நடைபெற்ற கோர நிகழ்ச்சி இன்று நினைத்தாலும் (அது செவி வழிக் கேட்டறிந்த சேதியாக இருந்த போதிலும்) என் நெஞ்சை உருக்குகிறது.*

*அந்நாள்களில் தந்தை வழிச் சொத்து ஆண்பிள்ளைகளுக்கு மட்டுமே உரிமைப்பட்டது. ஆண்குழந்தையாக என் அப்பா பிறந்த்தால் தனக்குச் சொத்துரிமை இல்லாது போய்விடும் என்று கருதிய என் ஒன்றுவிட்ட உறவினர் ஒருவர் என் தந்தையைக் கொன்றுவிட எண்ணினார்.*

*சமையல் செய்து முடிக்கவும் கோவில் மணி அடிக்கவே என் ஆச்சி உடன்தானே கோவிலுக்கு ஓடிவிட்டார். அந்நாள்களில் சிற்றூர்களில் வெளியூர் செல்வதாயிருந்தாலொழிய வீடுகளைப் பூட்டிச் செல்லும் வழக்கம் கிடையாது.*

*அந்நேரத்திற்காகவே காத்திருந்த எங்கள் ஒன்றுவிட்ட உறவினர் வீட்டுக்குள் நுழைந்து சமைத்து வைத்திருந்த உணவில் நஞ்சைக் கலந்துவிட்டுச் சென்றுவிட்டார்.*

*கோவிலில் இருந்து திரும்பிய என் ஆச்சி வீடு திரும்பிய தன் கணவனுக்கும் அன்பு மகனுக்கும் அவ்வுணவைப் பரிமாற என் தாத்தா இறக்கவும் நல்வினைப் பயனாக என் அப்பா உடன் உணவை வாந்தி எடுத்துவிட்டதால் உயிர் தப்பவும் ஏதுவாயிற்று.*

*அக் கொடியோன் ஊராரின் சினத்திற்கு ஆளாகி ஊரை விட்டே துரத்தி அடிக்கப்பட்டான் என்பது வேறு கதை.*

*நிலைக்காத சொத்தைவிட நிலைக்கும் கல்வியே சிறந்தது என்ற தீவிர உணர்வும், தொலை நோக்கும் கொண்ட என் ஆச்சி எங்ஙனமாயினும் என் அப்பாவைப் படிக்க வைத்து ஓர் ஆசிரியராக ஆக்கிவிட முயற்சி மேற்கொண்டார்கள்.*

*இங்கே நான் ஒரு உண்மையைக் குறிப்பிட்டாக வேண்டும். ஒரு நூற்றாண்டுக்கு முற்பட்ட அக் கால கட்டத்தில் வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டிருந்த எங்கள் சமுதாயத்திலும் ஊர்களிலும் விளை நிலங்களும் தோப்புக்களும் தோட்டங்களுமே சமுதாயக் கண்ணோட்டத்தில் ஒருவரது நிலையை மேம்படுத்தின. அக் கால கட்டத்தில் தொலை நோக்கு எண்ணம் கொண்டு – அதுவும் ஒரு பெண்மணி – கல்வியே சிறந்தது என்று தெளிவு பெற்று அதன் பொருட்டுத் தோவாளையிலிருந்து 10 கி.மீ. தொலைவிலுள்ள நாகர்கோவிலில் தங்கி என் அப்பாவைப் படிக்க வைத்தார்கள். ஆச்சியின் விருப்பத்திற்கிணங்க அப்பாவும் ஆசிரியர் வேலையில் சேர்ந்து பல ஊர்களில் பணியாற்றித் தனது 58வது வயதில் ஓய்வு பெற்றார்கள்.*



பணி ஓய்வு பெற்ற போது

தோவாளையில் அந் நாள்களில் இரண்டு ஆசிரியர்களே இருந்தார்கள். ஒருவர் தோவாளைத் தெக்கூரில் வாழ்ந்து வந்த திரு. சங்கரநாராயணபிள்ளை அவர்களும், தோவாளை வடக்கூரில் வாழ்ந்து வந்த என் தந்தையும் ஆவார்கள். முறையே அவர்கள் இருவரும் தெக்கூர் வாத்தியார், வடக்கூர் வாத்தியார் என்றே அழைக்கப்பட்டனர். இருவரும் இணை பிரியா நண்பர்களுமாவார்கள். வடக்கூர் வாத்தியார் வீடு என்றால் அனைவருக்குமே தெரிந்த வீடு.

தனது ஆசிரியர்பணியில் என் தந்தை மழு மனதுடன் செயல் பட்டார்கள். தனது ஆசிரியர் பணி பற்றி மணிக்கணக்கில் பேசினாலும் சலிப்பில்லாமல் பேசுவார்கள். தன் தொழிலில் அத்தகைய ஈடுபாடு அவர்களுக்கு இருந்தது. தன்னிடம் படித்து வந்த மாணவர்களைத் தன் பிள்ளைகளாகவே கருதி அன்புடனும் அதே சமயம் கண்டிப்புடனும் நடந்துகொள்வார்கள். அக்கால கட்டத்தில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பள்ளியில் சேர்த்தபின் தங்களது

பிள்ளைகளின் வளர்ச்சிக்கு ஆசிரியர்களையே முழுமையாக நம்பினார்கள். அந்த நம்பிக்கையை ஆசிரியர்களும் கைவிட்டதில்லை.

சிறப்பான ஆசிரியர்கள் எப்படி இருப்பார்கள் என்பதை ஒரு ஆங்கிலேயர் (தெரஸா ஏ. தாமஸ்) கீழ்க்கண்டவாறு வரையறுத்துள்ளார்..

i. *Great Teachers are Humble*
சிறப்பான ஆசிரியர்கள் அடக்கமானவர்கள்

ii. *Great Teachers are Patient*
பொறுமையானவர்கள்

iii. *Great Teachers are Kind and show Respect*
அன்பானவர்கள், பிறருக்கு மரியாதை தருபவர்கள்

iv. *Great Teachers Have Enthusiasm*
தாங்கள் கற்பிக்கும் பாடத்தில் முழு ஈடுபாடு கொண்டவர்கள்

*Great Teachers Show, not Tell for their Subject*
சொல்வதைவிடச் செய்து காண்பிப்பவர்

v. *Great Teachers Learn from their Students*
தனது மாணவர்களிடமிருந்து கற்றுக்கொள்பவர்கள்

vi. *Great Teachers are Positive; Great Teachers Smile*
நம்பிக்கையூட்டும் நேர் எண்ணமும் எப்போதும் புன்னகைப்பவருமாவர்

vii. *Great Teachers Engage their Students*
மாணவர்கள் தாமாகவே கற்பதை ஊக்குவிப்பவர்

ix. *Great Teachers have High Expectations*
தன் மாணாக்கர் நன்றாகவும் மிகுந்தும் கற்கவேண்டுமென்று எதிர்பார்ப்பவர்

x. *Great Teachers Provide a Warm Environment and Allow their*

*Students to make Mistakes*
*சுய கற்றலில் தவறுகளைத் தவறாக*
*எண்ணாமல், அவற்றைக் கற்றலில்*
*ஒரு படியாக எண்ணச் செய்வர்*

*மேற்கூறிய தகுதிகள் உக்திகள் அனைத்தையுமே என் தந்தையார் ஆசிரியப் பணியில் நிரூபித்துக் காட்டினார்கள்.*

*''வாத்தியாரின் பிள்ளை மக்கு'' என்று ஒரு பழமொழி வழக்கிலுள்ளது. இதனை யாரோ ஒருவர் ஏதோ ஒரு தருணத்தில் சொல்லியிருக்கக் கூடும் என்றும் எல்லோருக்குமே பொருந்தும் மொழி அன்று என்றும் என் தந்தையார் நிரூபித்துக்காட்டினார்கள்.*

*இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு திருமண வீட்டில் இரண்டுபேர் என் அருகில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். நான் யாரென்பது அவர்களுக்குத் தெரியாது. அதில் ஒருவர் சொன்னார் :*

*''திருமால்பிள்ளை வாத்தியார் தனது எட்டு பிள்ளைகளையும் சிறப்பாகப் படிக்க வைத்து ஒவ்வொருவரையும் வெவ்வேறு துறைகளில் பணியாற்ற வைத்துள்ளார்கள். இது நமக்கெல்லாம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது''*

*என் தந்தையின் பெருமையைப் பிறர் பாராட்டக் கேட்ட நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன்.*

*என் தந்தை எங்களை எப்படி உருவாக்கினார்கள், எப்படி வழி நடத்தினார்கள் என்பதைப் பின் வரும் பகுதிகளில் விரிவாக எடுத்துரைத்துள்ளேன்.*

*தந்தையாரின் பிறந்த தேதி    09 – 08 – 1908*
*தந்தையார் மறைந்த தேதி    05 – 07 – 1995*

*தாயாரின்   பிறந்த தேதி       29 – 10 – 1915*
*தாயார் மறைந்த தேதி          30 – 01 – 1990*

## *எங்கள் அம்மா*



*இத்தருணத்தில் அப்பாவின் சிறப்பான செயல்பாட்டிற்கு அம்மா எந்த அளவு உறுதுணையாக இருந்துள்ளார்கள் என்பதையும் இங்கே நான் கூற விழைகின்றேன்.*

*அம்மா மரணப்படுக்கையில் இருந்தபோது அப்பா சொன்ன வார்த்தைகள் இவை :*

''நான் எண்பது வயதிற்குப்பிறகும் உடல் நலமுடன் இருப்பதற்குக் காரணம் செல்லம்மாவின் அன்பும் அரவணைப்புமே. எனக்கும் என் பிள்ளைகளுக்கும் அவரவர் சுவைக்கேற்ப உணவு சமைப்பதில் அவளுக்கு நிகர் அவள்தான்''

அம்மாவைப்பற்றி இதை விட விரிவாகச் சொல்ல எனக்கு வார்த்தைகள் இல்லை.

எனினும் ஒரு சில விவரங்கள் என் அம்மாவைப்பற்றச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

நான் என் அப்பாவுக்கு எட்டாவது பிள்ளை. அதாவது எங்கள் ஊர் மொழியில் சொல்வதாக இருந்தால் 'கடைக்குட்டி'.

இறப்பது வரையும் என் அம்மாவின் அன்பும் அரவணைப்பும் எல்லா பிள்ளைகள் மீதும் ஒன்றுபோலவே இருந்தது. தன் பிள்ளைகளின் குணங்களை அறிந்து ஒவ்வொருவரிடமும் அதற்கேற்ப உறவாடுவார்கள். நாங்கள் அனைவருமே படித்துப் பட்டம் பெற்று நல்ல நிலையில் இருப்பதைக் கண்டு பூரிப்படைவார்கள்.

எங்கள் அம்மா கேரள மாநிலம் நெய்யாற்றின்கரையைச் சேர்ந்தவர்கள். அவர்களது அப்பா புகழ் பெற்ற நாட்டு வைத்தியர் குமார பிள்ளை. அவர்களுக்குச் சொந்தமாக நாட்டுமருந்துக் கடையும் இருந்தது. ஆகவே அம்மாவுக்கு வீட்டு வைத்தியம், பச்சிலைகள் மூலிகைகளை அடையாளம் காணல், அவற்றை மருந்தாகத் தயாரிக்கும் முறைகள், மருந்தெண்ணெய்கள் காய்ச்சுதல், கண் மை தயாரித்தல் ஆகியவை அத்துபடி. பல மருந்துகளை அவர்கள் வீட்டிலேயே தயாரித்து எங்களுக்கு உடல் நலமில்லாத காலங்களில் அளித்து வந்தார்கள். எடுத்துக்காட்டாக அம்மா எங்களுக்களித்த கை மருந்துகள்:

## Thank You for previewing this eBook

You can read the full version of this eBook in different formats:

- HTML (Free /Available to everyone)
- PDF / TXT (Available to V.I.P. members. Free Standard members can access up to 5 PDF/TXT eBooks per month each month)
- Epub & Mobipocket (Exclusive to V.I.P. members)

To download this full book, simply select the format you desire below